**இராஜபாளையம் நகராட்சி**

**16.07.2019**

**திருவள்ளுவர் ஆண்டு 2047 விகாரிவருடம் ஆனி மாதம் 31ம் தேதி 2019 ம் வருடம் ஜீலை மாதம் 16ம் தேதி செவ்வாய்க்கிழமை இந்நகராட்சியின் பி.எஸ்.குமாரசாமிராஜா நினைவுக்கூட்டமண்டபத்தில் மாலை 5.00 மணிக்கு இந்நகர் மன்றத்தின் அவசரக்கூட்ட நடவடிக்கைகள்.**

**வருகை-திரு.பி.நடராஜன்,நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் (பொ) மற்றும் தனி அதிகாரி**

1) உள்ளாட்சி தேர்தல் 2019க்கான வாக்காளர் பட்டியல் பதிவிறக்கம் பணிக்கு 1.5 நகராட்சிகளுக்கு பதிவிறக்கம் செய்யப்பட்டு தற்போது இந்நகராட்சியில் மேற்கண்ட பணிகள் முடிவு பெற்று விட்டது. முடிவு பெற்ற வாக்கச் சாவடி வாரியான வாக்காளர் பட்டியல்களை பதிவிறக்கம் பணியினை பிரிண்ட் எடுத்து அதனை ஒப்பு நோக்க மாவட்ட ஆட்சியர் விருதுநகர் அவர்கள் தொலைபேசியில் அறிவுறுத்தியதின் அடிப்படையில் மேற்கண்ட பணிகளை வெளியில் உள்ள கூட்டுறவு அச்சகம் மூலம் செய்ய வேண்டியுள்ளதாலும் மற்றும் உள்ளாட்சி தேர்தல் 2019 பணி தொடர்பான செலவினங்களுக்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (சி2/4601/2016)

**அஃகு**:- தேர்தல் பணியாக உள்ளதால் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 189 அனுமதிக்கப்பட்டது.

2)இராஜபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட முடங்கியார் ரோட்டில் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் பூங்காவில் ஏற்கனவே இயங்கி வரும் பொது சுகாதாரத்திற்கான பிரிவு – 2 அலுவலகத்தில் கூடுதலாக ஒரு பொருட்கள் வைப்பறை கட்டும் பணி மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீடு ரூ.1.60லட்சம் (ரூபாய் ஒரு லட்சத்து அறுபதாயிரம் மட்டும்)க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதியும் வேண்டப்படுகிறது.

**அஃகு:-** அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 190 அனுமதிக்கப்பட்டது.

3)இந்நகராட்சி பகுதி ஜவகர்மைதானத்தில் செயல்படும்அம்மா உணவகத்திற்கு தேவையான தட்டுமுட்டு சாமான்கள் மற்றும் பழுது பார்த்து இயங்க வேண்டிய மின் சாதனைகள் மற்றும் R.O.சிஸ்டம் ஆகிய பணிக்கு ரூ.45000/- (ரூபாய் நாற்பத்தைந்தாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் மேற்கொள்ள 28.06.2019ல் விலைப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் (இ1/198/2019)

| வ.எண் | விண்ணப்பதாரரின் பெயர் | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1) | அசோதா பாத்திர ஸ்டோர்ஸ்<br>72/458 அம்பலபுளி பஜார்<br>இராஜபாளையம் | ரூ.44,430/- |
| 2) | R.S.RAM GUHAN TRADERS<br>458A, அம்பலபுளி பஜார்<br>இராஜபாளையம் | ரூ.49,335/- |

**அஃகு:**- வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகை காட்டிலும் குறைவாக கொடுத்துள்ள அசோதா பாத்திர ஸ்டோர்ஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

தீர்மானம் எண் 191 அனுமதிக்கப்பட்டது.

4) இராஜபாளையம் நகராட்சி அலுவலகத்தில் முன்புற நுழைவு வாயிலினை அழகுபடுத்த அலங்கார விளக்குகள் பொருத்தி மற்றும் இதர மின் பணி மேற் கொள்ள மதிப்பீடு ரூ.1.25 லட்சத்திற்கு 28.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (இ1/05844/2019)

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1) | திரு.பி.முருகன் | 0.47% மதிப்பீட்டை விட குறைவு |
| 2) | திரு.சி.பாஸ்கரன் | 9.70% மதிப்பீட்டை விட அதிகம் |

**அஃகு:**- வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள திரு.பி. முருகன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

தீர்மானம் எண் 192 அனுமதிக்கப்பட்டது.

5) இராஜபாளையம் நகராட்சி வார்டு எண்.13 பெரிய கடை பஜார் பெண்கள் கழிப்பறையில் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கெள்ள மதிப்பீடு ரூ.4.25லட்சத்திற்கு 28.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (இ1/05845/2019)

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1) | திரு.பி.காளிராஜ்குமார் | 0.38% மதிப்பீட்டை விட குறைவு |
| 2) | திரு.எம்.பாலசாஸ்தா | 0.73% மதிப்பீட்டை விட அதிகம் |

**அஃகு**:- வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள திரு.பி. காளிராஜ்குமார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

தீர்மானம் எண் 193 அனுமதிக்கப்பட்டது.

6) இராஜபாளையம் நகராட்சி வார்டு எண்.3 பெருமாள் கோவில் தெரு முருகன் நடுநிலைப்பள்ளி அருகில் உள்ள பெண்கள் பொதுக் கழிப்பறையில் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கெள்ள மதிப்பீடு ரூ.3.00லட்சத்திற்கு 28.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளை முடிவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (இ1/05846/2019)

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1) | திரு.பி.காளிராஜ்குமார் | 0.51% மதிப்பீட்டை விட குறைவு |
| 2) | திரு.எம்.பாலசாஸ்தா | 3.81% மதிப்பீட்டை விட அதிகம் |

**அஃகு:-** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள திரு.பி. காளிராஜ்குமார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

தீர்மானம் எண் 194 அனுமதிக்கப்பட்டது.

7) இராஜபாளையம் நகராட்சி வார்டு எண்.5 புகழேந்தி சாலையில் உள்ள பொது கழிப்பறையில் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கெள்ள மதிப்பீடு ரூ.1.00லட்சத்திற்கு 28.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (இ1/05844/2019)

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1) | திரு.பி.காளிராஜ்குமார் | 0.40% மதிப்பீட்டை விட குறைவு |
| 2) | திரு.எம்.பாலசாஸ்தா | 5.50% மதிப்பீட்டை விட அதிகம் |

**அஃகு**:- வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள திரு.பி. காளிராஜ்குமார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

தீர்மானம் எண் 195 அனுமதிக்கப்பட்டது.

8) இராஜபாளையம் நகராட்சி உரக்கிடங்கில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பைகளை அரைத்து உரம் தயாரிக்க கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் உள் பகுதியில் Electrical Lighting System இல்லை என்பதால் பணிகள் செய்வதற்கு புதியதாக LED விளக்குகள் அமைக்க உத்தேச செலவினம் ரூ.4.00லட்சம் (நான்கு லட்சம் மட்டும்) மட்டும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (இ1/06185/2019)

**அஃகு**:- அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 196 அனுமதிக்கப்பட்டது.

9) இராஜபாளையம் நகராட்சியில் மின் ஆளுமை பணிகளை அனைத்து பணியாளர்களும் தங்கள் இருக்கையிலிருந்தே கையாள பிரிவு வாரியாக புதிய இருக்கை மற்றும் நெட்வொர்க் வசதி ஏற்படுத்தவும் ஏற்கனவே உள்ள யூ.பி.எஸ்.மின்சார வசதி ஏற்படுத்தவும் மற்றம் புதிய பேட்டரி வசதி ஏற்படுத்த மதிப்பீடு ரூ.6.40 லட்சத்திற்கு 28.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (இ1/05844/2019)

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1) | M/S SF SONIC | ரூ.6,35,400/- |

| | | |
|---|---|---|
| | Rajapalayam | |
| 2) | M/S.VIVEKA ELECTRONICS POWER SYSTEM Rajapalayam | ரூ.6,65,000/- |

**அஃகு:-** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள M/S SF SONIC Rajapalayam நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

தீர்மானம் எண் 197 அனுமதிக்கப்பட்டது.

நகராட்சி பொறியாளர் மற்றும்
ஆணையாளர்(பொ) /தனி அலுவலர்
இராஜபாளையம் நகராட்சி